சுருக்கம்

வாகனம் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் – பழைய ஈப்பு பதிவு எண். TN09 G 1046 கழிவு நீக்கம் செய்யப்பட்டது – புதிய வாகனம் (ஈப்பு) வாங்குவதற்கு அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–2) துறை

அரசு ஆணை (டி) எண்.108

நாள்: 08.03.2010.
மாசி: 24.
திருவள்ளுவர் ஆண்டு – 2041
படிக்கப்பட்டவை:

1. இந்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடித எண்.R-20015/ 32/2004–மாஊவமு, நாள் 03.01.2005.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல், கடிதம் ந.க.எண்.706/2007/அ1, நாள் 11.09.2009.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15, கடிதம் எண். Rc. 6065/09/SGSY, நாள் 11.11.2009.

* * * * *

ஆணை:

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு எண்.TN09 G 1046 கழிவு நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கு பதிலாக புதிய ஈப்பு வாங்குவதற்கு அரசின் அனுமதியைக் கோரியுள்ளார்.

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு புதிய வாகனங்கள் வாங்குவது குறித்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

(1) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவினை சில்லரைச் செலவு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் 30% விழுக்காடு என்று உச்சவரம்பிற்குள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேல் செலவு ஏற்படும் இனங்களில் மாநில அரசே செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(த.பி.பா.)

(2) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக் குழு (Governing Body) புதிய வாகனம் வாங்குவதற்கு உரிய ஒப்புதலை அளிக்க வேண்டும்.

(3) பழைய வாகனத்தைக் கழிவு செய்ய அதிகாரமுடைய அலுவலரின் (மாநில மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர்) சான்றிதழ் (Certificate of condemnation of old vehicle) செயற்குறிப்புடன் அனுப்பப்படவேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது செயற்குறிப்பில் புதிய வாகனம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் 30% சில்லரைச் செலவின நிதியிலிருந்து வாங்கப்படும் என்றும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், மேலும் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் 23.12.2008 நாளிட்ட செயல்முறை நடவடிக்கையில் வாகன எண். TN09 G 1046 –ஐ கழிவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, கழிவு நீக்கம் செய்யப்பட்ட ஈப்புக்குப் பதிலாக புதிய வாகனத்தினை (ஈப்பு) வாங்குவதற்கு அனுமதி வழங்கக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இச்செயற்குறிப்பை கவனத்துடன் ஆய்வு செய்த அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளரின் பரிந்துரைகளை ஏற்று, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பயன்பாட்டிற்காக கழிவு நீக்கம் செய்யப்பட்ட ஈப்புக்குப் பதிலாக அரசாணை (நிலை) எண்.1229, உள் துறை, நாள் 21.12.2006ல் வெளியிடப்பட்ட ஆணையில் அரசு ஒப்புதல் அளித்துள்ள பட்டியலில் கண்டுள்ள தயாரிப்பில் உள்ள புதிய வாகனம் வாங்குவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்.
முதன்மை கணக்காயர், சென்னை – 6 /18/35.
<u>நகல்:</u>
நிதி (ஊ.வ.) துறை, சென்னை –9.
உதிரி / இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.